05.09.2024

S.C.No. 21/2024

PW. 2 Tr. திரு. அரவிந்த்

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி (எதிரி தரப்பில்) :-

நானும், எதிரியும் சுமார் எவ்வளவு நாள் நண்பர்கள் என்றால் 2 வருடமாக நண்பர்கள். நான் பாலிடெக்னிக் படிப்பை பாதியில் நிறுத்திவிட்டு எனது அப்பாவின் ஒர்க்ஷாப்பில் அவருக்கு உதவியாக இருக்கிறேன் என்றால் சரிதான். நான் பாலிடெக்னிக் படிப்பை எந்த வருடத்தில் நிறுத்தினேன் என்றால் எந்த வருடம் என ஞாபகம் இல்லை முதல் வருடத்திலேயே நின்றுவிட்டேன். அதிலிருந்து எனது அப்பாவிற்கு உதவியாக ஒர்க்ஷாப்பில் இருக்கிறேன் என்றால் சரிதான். எனது பெற்றோர் என்னை வீட்டில் மிக கட்டுப்பாட்டுடன் வளர்க்கிறார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் 28.08.2023 அன்று நான் சம்பவ இடத்திற்கு எத்தனை மணிக்கு வந்தேன் என்றால் மாலை 7.30 மணியளவில் வந்தேன். என்னுடன் யார் வந்தது என்றால் நான் மட்டும்தான் வந்தேன். 7.30 மணிக்கு வந்து நான் அங்கு என்ன பண்ணிக் கொண்டிருந்தேன் என்றால் அங்கிருந்த SSD பாத்திரக்கடையில் பகுதி நேர வேலை செய்து கொண்டிருந்தேன். பகுதி நேர வேலை என்றால் இரவு வேலையா இல்லை கூப்பிட்டால் மட்டும் செல்வேன். தினம்தோறும்

இரவு 8.00 மணிக்கு SSD பாத்திரக்கடை அடைக்கப்பட்டு விடும் என்றால் சரிதான். 8.00 மணிக்கு அடைக்கப்படும் கடையில் 7.30 மணிக்கு பகுதி நேர வேலைக்கு வந்தேன் என சொல்வது பொய் என்றால் சரியல்ல அன்று வேலை பார்க்கவில்லை வேலைக்காக வெளியே உட்கார்ந்திருந்தேன். கடையை அடைத்த பிறகு 8.00 மணிக்கு மேல் என்ன வேலை என்றால் அதன் பிறகு எந்த வேலையும் இல்லை. எத்தனை மணிக்கு கிஷோர் அந்த இடத்திற்கு வந்தார் என்றால் 8.15 மணி இ,ருக்கும். கிஷோரும், நானும் நீண்ட கால நண்பர்களா என்றால் சுமார் 2 வருடங்களாக நண்பர்கள். நான் 7.30 மணிக்கு வந்த பிறகு தான் மனோஜ்ம், ராஜகோபாலும் சம்பவ இடத்திற்கு வந்தார்களா என்றால் ஆமாம். மனோஜ்ம், ராஜகோபாலும் எத்தனை மணிக்கு வந்தார்கள் என்றால் அது எனக்கு தெரியவில்லை. அவர்கள் இருவரும் எந்த பக்கத்திலிருந்து வந்தார்கள் என்று ஞாபகம் உள்ளதா என்றால் இல்லை. அவர்கள் இருவரும் எந்த இடத்தில் நின்று கொண்டிருந்தார்கள் என்றால் தென்மேற்கு சந்தில் நின்று கொண்டிருந்தார்கள். அந்த சந்தில் எவ்வளவு தூரத்தில் நின்று கொண்டிருந்தார்கள் என்றால் அந்த சந்தின் ஆரம்பத்தில் நின்று கொண்டிருந்தார்கள். நடைபாதையில் நின்று கொண்டிருந்தார்களா என்றால் இல்லை கொஞ்சம் உள்ளே நின்று கொண்டிருந்தார்கள். எவ்வளவு தொலைவில் நின்று கொண்டிருந்தார்கள் என்றால் இரண்டு, மூன்று கையளவு உள்ளே நின்று கொண்டிருந்தார்கள். நான் டீக்கடை அருகே நின்றேனா என்றால் ஆமாம். நான் எப்போது ராஜகோபாலையும், மனோஜ்ஜையும் பார்த்தேன் என்றால் பேச்சி கத்தும் போது பார்த்தேன். அப்போதும் நான் டீக்கடை அருகே தான் நின்றேனா என்றால்

ஆமாம். அந்த நேரத்தில் கிஷோர் எங்கிருந்து வந்தார் என்றால் அவர் வேலை முடித்துவிட்டு மேற்கு பக்கத்திலிருந்து வந்தார். அதுவரைக்கும் இந்த கிஷோர் வேலையில்தான் இருந்தாரா என்றால் ஆமாம். இந்த மனோஜ்க்கும், ஆஜர் எதிரிக்கும் எவ்வளவு நேரம் தகராறு நடந்ததது என்றால் சரியாக சொல்ல முடியவில்லை 6 அல்லது 7 நிமிடங்கள் இருக்கலாம். எப்படி கத்தி கீழே விழுந்தது என்றால் எதிரி குத்த வந்தபோது மனோஜ் தடுக்க முயற்சித்தார் அப்போது கீழே விழுந்தது. நான் வீட்டிலிருந்து எந்த வாகனத்தில் வந்திருந்தேன் என்றால் பைக்கில் வந்திருந்தேன். வாகன எண். தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. இந்த சம்பவம் நடந்த போதும் மனோஜிற்கு காயம் ஏற்பட்ட போதும் நான் அதை வேடிக்கைதான் பாரத்துக் கொண்டிருந்தேனா என்றால் இல்லை. தடுக்க போனோன் எதிரி பேச்சி ஆவேசமாக இருந்ததால் கிட்டே போக முடியவில்லை. தூரமாகதான் நின்றேனா என்றால் கொஞ்சம் தள்ளி இருந்தேன். மனோஜ், ராஜகோபால் இவர்கள் இருவரில் யார் என்னுடைய நண்பர் என்றால் மனோஜ் என்னுடைய நண்பர். மனோஜிற்கு காயம் ஏற்பட்டு சிகிச்சை தேவைப்படும்போது எனது நண்பர் என்றும் பாராமல் அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று காப்பாற்றுவதற்கு முயற்சி செய்யவில்லை என்றால் என்னுடைய பைக்கு சற்று தூரத்தில் இருந்தது. டீக்கடைக்கு அருகே இருந்த பைக்கை யார் தூரமாக எடுத்து சென்றது என்றால் டீக்கடைக்கு அருகில் பைக் இல்லை. தெப்பகுளம் அருகே இருந்தது. தெப்பகுளத்தில் வடக்கு கரையில் நிறுத்தியிருந்தேன். டீக்கடைக்கு அருகிலோ SSD பாத்திரக்கடை அருகிலோ வண்டி நிறுத்துவதற்கு இடம் இல்லாமல் தான் அங்கு நிறுத்தினேனா என்றால் இல்லை

நண்பர் வீடு இருந்தது அங்கு நிறுத்தினால் பாதுகாப்பாக இருக்கும் என்று நிறுத்தினேன். நண்பர் பெயர் என்ன என்றால் சக்தி. அவருடைய தந்தை பெயர் எனக்கு தெரியாது. சம்பவ இடத்திலிருந்து நான் பைக் நிறுத்தியதாக சொல்லும் இடத்திற்கு ஓடி போனால் எவ்வளவு நேரத்தில் போகலாம் என்றால் 2 நிமிடத்தில் போகலாம். சம்பவம் நடந்து எதிரி அங்கிருந்து தப்பி போன பிறகு ராஜகோபால், மனோஜ்ஜ மருத்துவமனைக்கு கொண்டு செல்வதற்கு ஆட்டோ, டேக்சி க்கு போன் பண்ணிக் கொண்டிருந்தாரா என்றால் இல்லை. அதிர்ச்சியில் பார்த்துக் கொண்டிருந்ததார் அப்போது மனோஜ்ஜின் நண்பர் வந்தார் அவர்கள் மருத்துவமனைக்கு போனார்கள். நான் ஓடி போய் அந்த பைக்கை கொண்டு வந்து மனோஜ்ஜ மருத்துவமனை கொண்டு செல்வதற்கு முன் வரவில்லையா என்றால் அவசரத்தில் என்ன செய்வது என்று புாியவில்லை அதற்குள் அவர்களை அனுப்பி வைத்துவிட்டு நாங்கள் பின்னால் சென்றோம். அவர்களை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துவிட்டு பிறகு நான் போய் எனது பைக்கை எடுத்து வந்து மருத்துவமனைக்கு சென்றோமா என்றால் ஆமாம். நான் எத்தனை மணிக்கு மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் இரவு சுமார் 8.00 அல்லது 8.25 இருக்கும். நானும், கிஷோரும் சேர்ந்துதான் போனோமா என்றால் இல்லை. நான் மட்டும்தான் சென்றேன். என்னுடைய நண்பர் இறந்து விட்டார் என்பது எத்தனை மணிக்கு தெரியும் என்றால் 8.30 மணியளவில் தெரியும். நானும், ராஜகோபாலும் பிரேதத்தை ஆசாரிபள்ளம் மருத்துவமனைக்கு எடுத்து செல்லும் வரையில் அங்கேதான் இருந்தேனா என்றால் இல்லை காவல் நிலையத்திற்கு விசாரணைக்காக

சென்றேன். காவல் நிலையத்திற்கு என்னை யார் அழைத்தது என்றால் நானாகதான் போனேன். காவல் நிலையத்திற்கு சென்று நடந்த சம்பவத்தை சொல்லிவிட்டு இரவே வீட்டிற்கு சென்றுவிட்டேனா என்றால் இல்லை உட்கார சொன்னார்கள் மறுநாள் காலை 8.00 மணிவரையில் காவல் நிலையத்தில் இருந்தேன். 8.00 மணிக்கு காவல் நிலையத்திலிருந்து நேராக வீட்டிற்கு போய்விட்டேனா என்றால் ஆமாம். எனது நண்பர் மனோஜ்டைய பிரேத பரிசோதனையிலோ, நல்லடக்கத்திலேயோ நான் கலந்து கொள்ளவில்லையா என்றால் நல்லடக்கத்தில் கலந்து கொண்டேன். சுமார் எத்தனை மணிக்கு நல்லடக்கத்திற்கு சென்றேன் என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. நான் சொன்ன மாதிரி, சொன்ன இடத்தில், சொன்ன விதத்தில் எதிரி எந்த குற்ற செயலிலும் ஈடுபடவில்லை என்றாலும் எனது நண்பர் மனோஜின் சகோதரருக்கும், மனோஜிற்கும் இருந்த முன் விரோதத்தின் காரணமாக மனோஜின் சகோதரர் ராஜகோபால் மனோஜ்ஜ திட்டம்போட்டு கொலை செய்து விட்டு சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிப்பதற்காக எதிரியின் மீது அபாண்டாமாக பழி கூறி எதிரியை வழக்கில் சிக்க வைத்து தண்டிப்பதற்காக ராஜகோபால்க்கு வேண்டி நான் நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.